1981 பிப்ரவரி 7]

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இந்தத் தடவை குறுவை நெல் அதிகமாக விளைந்திருந்தும் விற்க முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டபொழுது அது விலை போகாமல் இருந்தது என்று அரசாங்கத்திற்கு மனு செய்தது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன வழி செய்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமான விளைச்சல் குறுவையில் கிடைத்தது என்று அமைச்சர் சொன்னார். வருகிற ஆண்டிலே கூட, இன்னும் அதிகமாக உற்பத்தியை எதிர்பார்க்கவேண்டும் என்றால், விவசாயிகளுக்கு தண்ணீர் வருவதற்கு முன்னாலே, சுருட்டுபா நாற்று விட்டு, தண்ணீர் வந்தபிறகு, அந்த நாற்றை பறித்து நடுபவருக்கு அதற்கு ஏதுவாக, அரசு உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவை நெல் அதிகமாக மகசூல் கிடைத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு கிடைத்ததைவிட இந்த ஆண்டு எவ்வளவு அதிகமாகக் கிடைத்தது என்பதைத் தெரிவிப்பதோடு, இந்த ஆண்டு தாளடி, சம்பா மகசூல் பாதிக்கப்பட்டது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது தகவல் வந்ததா? அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏதாவது சலுகை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பற்றிய தகவல்தான் என்னிடம் இருக்கிறது. பாதிக்கப்பட்டதைப் பற்றிய விவரம் அரசுக்குத் தெரியாது.

வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 233— திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூரிலிருந்து திட்டக்குடி செல்லும் பெருவழித் துறை சாலையில் ஓடும் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அரசிடம் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பாலம் கட்டும் திட்டம் எதுவுமில்லை. ஆனால் மங்களூர் ஒன்றிய பொது நிதியிலிருந்து ஒரு தரைப் பாலம் கட்டுவதற்கு தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்ட கருத்து பரிசீலிக்கப்பட்டு ஒன்றியத்தின் உபரி நிதியிலிருந்து மேற்சொன்ன பணியினை மேற்கொள்ளும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் நான் கேட்டிருக்கும் பால சிருகூர் பார்டரிலிருந்து வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்படும் பாலமாகும். அப்பாலம் இல்லாததால், விவசாயப் பொருள்களைப் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லவும், பயணத்திற்கும் பெருத்த தடை ஏற்பட்டிருக்கிறது. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு அமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தை மிக விரைவிலே அரசு முடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன பதிலிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் யூனியனுடைய பணத்திலிருந்து, உபரி நிதியிலிருந்து கட்ட வேண்டுமென்ற பரிசீலனை அரசினுடைய ஆய்விலே இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக ஏறத்தாழ ரூ. 15 இலட்சம் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. எஸ், இராசு: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்த நிதி அனைத்தும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒரு யூனியனிலிருந்து ரூ. 15 இலட்சத்தை ஒரே ஒரு திட்டத்திற்கு அல்லது அந்தத் தரை மட்டப் பாலத்திற்குப் போடக்கூடிய நிலையில் அந்தப் பஞ்சாயத்து இல்லையென்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தத் திட்டம் விரைவில் நடைபெற அரசு சிறப்பான முறையில் ஏதேனும் நிதி உதவி அளித்து திட்டத்தை முடிக்குமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, புறச்சாலைகள் திட்டத்தின் அடிப்படையிலே இதை உயர்மட்டப் பாலமாக எடுக்க வேண்டுமென்று சொன்னால், ரூ. 40 இலட்சம் செலவாகும். அதனால் தரைமட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்ற யோசனை அரசினுடைய பரிசீலனையிலே இருந்து வருகிறது. நிதி நிலைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, இந்தப் பாலம் திருச்சி மாவட்டத்தையும் தென்னாற்காடு மாவட்டத்தையும் இணைக்கின்ற முக்கியமான பாலமாக இருக்கிற காரணத்தால் தான், அரசே பார்ட் டூ ஸ்கீமில் எடுத்து நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இரண்டாம் நிதித் திட்டத்திலே எடுக்க முடியாத நிலைமையிலே அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராஜபாளையத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடம்

*வினா எண். 234—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராஜபாளையத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சுமார் 2 இலட்சம் பெறுமானம் உள்ள 1,110 ச. அடி நிலம் வருடத்திற்கு ரூ. 12-க்கு மில் உரிமையாளருக்கு குறைந்த குத்தகைக்கு விட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) வினாவில் குறிப்பிட்டுள்ள நிலத்தை இராஜபாளையம் ஜானகிராம் மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு 72-ம் ஆண்டில் 5 ஆண்டுகளுக்கு குத்தகை விடப்பட்டது. மீண்டும் 77 ஆம் ஆண்டில் 2 வருடங்களுக்கு குத்தகைக்கு நீட்டிக்கப்பட்டது.

(ஆ) மேலும் குத்தகைக்கு நீட்டிக்குமாறு விண்ணப்பித்த போது அவ்விடத்தில் சாலையை அகலப்படுத்த வேண்டியிருந்ததால் அது மறுக்கப்பட்டது.

[முற்பகல் 9-50]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தை அரசாங்கத்திலிருந்து குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அரசு அனுமதி இல்லாமல் அங்கே மாடிக்கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் நெடுஞ்சாலைத் துறை அந்த சாலையை அகலப்படுத்த இருப்பதால் அந்தக் கட்டிடத்தை இடிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமா? இதற்குக் காரணமாக இருந்த, குறைந்த குத்தகைக்கு விட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, குத்தகைக்கு விடும்போது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் அது குத்தகைக்கு விடப்பட்டது. அந்த 1,410 சதுர அடி நிலம் 1972 ஆம் ஆண்டில் 6 ரூபாய்க்கு மட்டுமே குத்த